O.S.No. 12/2022 – Date : 12.02.2026

PW1 – சிவராமன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதியை எந்த வகையில் தெரியும் என்றால் அவர் குடும்ப நண்பர். பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.13,00,000/– கொடுத்தேன். தொகையை வங்கி மூலமாக கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரூ.5,00,000/– வங்கி மூலமாகவும் ரூ,8,00,000/– ரொக்கமாகவும் கொடுத்தேன். அவ்வளவு தொகை என்னிடம் இல்லை என்றும் தொகை இருந்திருந்தால் வருமானவரி சட்டப்படி நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

தொகையை எங்கே வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். எந்த நேரத்தில் பணம் கொடுத்தேன் என்றால் மாலை 5.00 மணி சுமாருக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி கடனுறுதி பத்திரத்தை அவராக எழுதி கொண்டுவந்தாரா அல்லது நான் எழுதினேனா என்றால் அவரே டைப் செய்து கொண்டு வந்தார். கடனுறுதி ஆவணம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் பிரதிவாதியான சாந்தாவின் பெயரில் வாங்கப்பட்டது. இது சம்மந்தமாக வேறு சிவில் வழக்கு தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கின் தற்போதைய நிலை என்ன என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த சிவில் வழக்கு தற்போது முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண் ஓஎஸ்.61/2022 மற்றும் 62/2022 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அது நிலுவையில் உள்ளது. Money lenders Act படி நான் கடன் கொடுக்க பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடம் பணம் கேட்டு நான் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி.

இந்த வழக்கு சம்மந்தமாக ஓமலூரில் உள்ள பிரதிவாதியின் நிலத்தை கடனுக்கு ஆதரவாக Memorandum of title deed ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அதில் தருமபுரியில் உள்ள நிலத்தையும் சேர்த்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில் தருமபுரியில் ஏன் வழக்கு தொடுக்கவில்லை என்றால் பிரதிவாதி சேலத்தில் இருப்பதால் நான் தருமபுரியில் வழக்கு தொடுக்கவில்லை. கிரயம் பெறுவதற்காக மேற்படி ஆவணத்தை நான் ஏற்படுத்தி உள்ளேன் என்றும், மேற்படி கிரய தொகையை கொடுக்க முடியாததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை. Sd/-S.Sumathy,

Principal District Judge, Salem.